# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6
# பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு ஏப்ரல் – 2013
# சமூக அறிவியல்

**மொத்த மதிப்பெண்கள் 100**

**பிரிவு – I**

| பகுதி – I | | | 14 x 1 = 14 |
|---|---|---|---|
| 1 | அ | இரயில் வழி | |
| 2 | அ | ஃபிரான்சிஸ் ஃபெர்டினான்டு | |
| 3 | அ | மின்னல் போர் | |
| 4 | அ | இராஜாராம் மோகன்ராய் | |
| 5 | ஆ | அமைதியில் | |
| 6 | ஈ | புது டெல்லி | |
| 7 | அ | அக்டோபர் 12, 2005 | |
| 8 | ஆ | காட்வின் ஆஸ்டின் | |
| 9 | ஆ | யுரேனியம் | |
| 10 | இ | மும்பை | |
| 11 | ஆ | டெல்லி | |
| 12 | இ | வேளாண்மைத்துறை | |
| 13 | ஆ | பிரதமர் | |
| 14 | அ | 1967 | |

| பகுதி – II | | | | 2 x 5 =10 |
|---|---|---|---|---|
| 15 i) | | | | 5 x 1 = 5 |
| | அ | கருஞ்சட்டைகள் | – | முசோலினியின் தொண்டர்கள் |
| | ஆ | நியூயார்க் | – | ஐ. நா. தலைமையகம் |
| | இ | இந்து சமயத்தின் மார்ட்டின் லூதர் | – | தயானந்த சரஸ்வதி |
| | ஈ | நீதிக் கட்சி | – | டி. எம். நாயர் |
| | உ | வைக்கம் வீரர் | – | ஈ. வே. ராமசாமிப் பெரியார் |
| ii) | | | | 5 x 1 = 5 |
| | ஊ | பழுப்பு | – | ஒரு வகை நிலக்கரி |
| | எ | சணல் தொழிலகம் | – | மேற்கு வங்காளம் |
| | ஏ | தெற்கு ரயில்வே | – | சென்னை |
| | ஐ | கிராமச் சாலைகள் | – | பஞ்சாயத்து |
| | ஒ | டி. ஐ. ஆர். ஓ. எஸ் | – | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |

## பிரிவு – II

| | பகுதி – I | 10x2=20 |
|---|---|---|
| 16 | அமெரிக்கா ஈராக்கின் மீது படையெடுத்து அங்கு தன் நாட்டிற்குச் சாதகமான ஒரு அரசை ஏற்படுத்தியது. இது இராணுவ ஏகாதிபத்தியம் என அழைக்கப்படுகிறது. | 2 Marks |
| 17 | தேசிய தொழில் மீட்புச் சட்டம் தொழிற்சாலைகளில் சம்பள உயர்வு, பணிநேரக் குறைப்பு போன்ற சீர்த்திருத்தங்களைக் கொண்டு வந்தது. | 2 Marks |
| 18 | இந்திய இராணுவத்தில் ஆங்கிலேயரால் புதிய என்பீல்டு ரக துப்பாக்கிகள் கொழுப்பு தடவிய தோட்டாக்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>தோட்டாக்களின் மேலுறைகளில் தடவப்பட்டிருந்த பசையானது பசுவின் நெய் என்றும் பன்றியின் கொழுப்பு என்றும் வதந்தி கிளப்பப்பட்டது.<br>இந்துக்களும், முஸ்லீம்களும் இத்தோட்டாக்களை பயன்படுத்துவது தங்களது சமயக் கோட்பாட்டிற்கு எதிரானது என்று கருதினர். இதுவே புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்தது. | 2 Marks |
| 19 | சாதி சமய வேறுபாடுகள் அர்த்தமற்றவை. அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்ட வேண்டும்.<br>மனித இனத்திற்குச் செய்யும் தொண்டே மோட்சத்தை அடைவதற்கான வழி. கடவுள், கருணை மற்றும் அறிவு வடிவமாகத் திகழ்கிறார். உயிர்களிடத்தில் காட்டும் கருணையும் இரக்கமுமே கடவுளை அடையும் வழியாகும். | 2 Marks |
| 20 | சுரேந்திரநாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, பெரோஷா மேத்தா, கோபாலகிருஷ்ண கோகலே, எம். ஜி. ரானடே ஆகியோர் மிதவாதிகள் ஆவார். | 2 Marks |
| 21 | ஒரே தலைமை, சர்வாதிகாரியின் கீழ் ஒரே கட்சி ஆட்சி, பயங்கரவாதம், பொருளாதார ஆளுமை ஆகியவை பாசிசத்தின் நான்கு தூண்களாகும். | 2 Marks |
| 22 | 1. பொதுச்சபை<br>2. நிர்வாக சபை<br>3. செயலகம்<br>4. சர்வதேச நீதி மன்றம்<br>5. சர்வதேச தொழிலாளர் அமைப்பு | 2 Marks |
| 23 | சுயமரியாதை இயக்கம் மதம், ஜாதி, அரசியல் மற்றும் சமுதாயத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைக் கடுமையாக எதிர்த்தது.<br>மூடநம்பிக்கைகளையும், பழமைவாதத்தையும் ஒழிக்கப்பாடுபட்டது. பெண்கல்வி, விதவைகள் மறுமணம், கலப்புத் திருமணம் மற்றும் | 2 Marks |

| | | |
|---|---|---|
| | குழந்தைத் திருமண முறை ஒழிப்பு ஆகியவற்றிற்காகக் குரலெழுப்பியது. | |
| | **பகுதி – I I** | |
| **24** | இன ஒதுக்கல் கொள்கை என்பது ஆப்பிரிக்காவில் பின்பற்றப்பட்ட இன வேறுபாட்டுக் கொள்கையாகும்.<br>தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர்கள், ஆப்பிரிக்க குடிமக்களுக்கு சம உரிமை வழங்க மறுத்தனர். இப்பிரச்சனையை 1946 – ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் இந்தியா முதன் முதலில் எழுப்பியது. நெல்சன் மண்டேலாவின் தொடர் போராட்டம் காரணமாக 1990 –ஆம் ஆண்டு இன ஒதுக்கல் கொள்கை முடிவுக்கு வந்தது. | **2 Marks** |
| **25** | கிறிஸ்துவ மதம், இஸ்லாம் மதம், புத்தமதம், சமணமதம், சீக்கிய மதம் மற்றும் இந்து மதம். | **2 Marks** |
| | **பகுதி – III** | |
| **26** | அந்தமான், நிகோபர் மற்றும் இலட்சத் தீவுகள் இந்திய தீவுக் கூட்டங்கள் ஆகும். | **2 Marks** |
| **27** | ஆந்திரப் பிரதேசம், ஜார்க்கண்ட், பீகார் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் மைக்கா உற்பத்தி செய்யப்படுகிறது. | **2 Marks** |
| **28** | காரிஃப், ராபி, சையத் | **2 Marks** |
| **29** | கரடு முரடான தரைப்பகுதிகளிலும், நீருக்கடியிலும் குழாய்வழி போக்குவரத்தை அமைக்க இயலும். குழாய் போக்குவரத்தை அமைப்பதற்கு முதலில் ஆகும் செலவு அதிகம். ஆனால் தொடர்ந்து பராமரிப்பதற்கும் இயக்குவதற்கும் செலவு குறைவாகும். இது தங்குதடையற்ற போக்குவரத்தை உறுதி செய்வதுடன் கப்பலில் ஏற்றி இறக்கும் போது ஏற்படும் இழப்பையும் மற்றும் தாமதத்தையும் குறைக்கிறது. இதனை இயக்குவதற்கு குறைந்த அளவே எரிபொருள் தேவைப்படுகிறது. | **2 Marks** |
| **30** | கந்தக–டை ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு, கார்பன் மோனோ ஆக்ஸைடு மற்றும் அங்கக வேதியியல் பொருட்கள் ஆகியவை காற்று மாசுக்களாகும். | **2 Marks** |
| **31** | மான்சூன் என்ற சொல் அரேபிய சொல்லான மௌசிம் என்பதிலிருந்து வந்தது. இதன் பொருள் பருவகாலம் என்பதாகும். கோடை காலத்திற்கும் குளிர் காலத்திற்கும் இடையே தங்களது திசையை முழுவதும் மாற்றிக் கொண்டு வீசும் காற்றுகளுக்கு பருவக்காற்று என்று பெயர். | **2 Marks** |
| **32** | சாக்கு பைகள், கம்பளங்கள், கயிறு, நூலிழைகள், போர்வைகள், சணல் துணிகள் மற்றும் தார்பாலின் ஆகியவை.<br>**(ஏதேனு« 4 bghUŸfŸ)** | **2 Marks** |
| **33** | புவியின் எந்த ஒரு பொருளையும் நேரடியாகத் தொடர்பு கொள்ளாமல் | |

| | | |
|---|---|---|
| | புவியின் விவரங்களை தொலைவிலிருந்து சேகரிப்பது தொலை நுண்ணுணர்வாகும். | 2 Marks |
| | <u>பகுதி – IV</u> | |
| 34 | அரசு, பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது தலையிடாக் கொள்கை. | 2 Marks |
| 35 | பொதுத்துறை நிறுவனங்களும், தனியார் துறை நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்படுவதை கலப்புப் பொருளாதாரம் என்கிறோம். | 2 Marks |

<u>பிரிவு –III</u>

| | |
|---|---|
| <u>ஏதேனும் நான்கினை வேறுபடுத்திக் காட்டுக.</u> | மதிப்பெண்: 8 |
| <u>ஒவ்வொரு வினாவிற்கும் எவையேனும் இரண்டு எழுதினால் போதுமானது</u> | 4 x 2 = 8 |

| | | |
|---|---|---|
| 36 | <u>கிரீன்விச் தீர்க்க நேரம்</u> | <u>இந்திய திட்ட நேரம்</u> |
| | 1. உலக பொது நேரம்.<br>2. இது $0^0$ தீர்க்க ரேகையின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.<br>3. இத்தீர்க்கக்கோடு இலண்டன் வழியாகச் செல்கிறது.<br>4. கிரீன்விச் நேரம் இந்திய நேரத்தை விட 5 மணி 30 நிமிடம் குறைவாக இருக்கும். | 1. இது இந்தியாவின் திட்ட நேரம்.<br>2. இது $82^0$ 30’ கிழக்கு தீர்க்க ரேகையின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.<br>3. இத்தீர்க்கக்கோடு இந்தியாவின் நடுவே அலகாபாத் வழியாகச் செல்கிறது.<br>4. இந்தியத் திட்ட நேரம் கிரீன்விச் $0^0$ தீர்க்க நேரத்தை விட 5 மணி 30 நிமிடம் முன்னதாக உள்ளது. |
| 37 | <u>வானிலை</u> | <u>காலநிலை</u> |
| | 1. ஒரு நாளில் ஒரு இடத்தில் வளிமண்டலத்தில் நிலவும் தட்ப வெப்ப நிலையே ஆகும்.<br>2. வானிலை அன்றாட நிலையைக் குறிப்பது.<br>3. மாறுதலுக்கு உட்பட்டது. | 1. ஓரிடத்தின் நீண்ட நாளைய சராசரி வானிலையே காலநிலை ஆகும்.<br>2. குறைந்த பட்சம் 35 வருட கால வானிலை பதிவுகள் அவசியம் .<br>3. மாறாதது. |
| 38 | <u>புதுப்பிக்கக் கூடிய வளம்</u> | <u>புதுப்பிக்க முடியாத வளம்</u> |
| | 1. பயன்படுத்திய பிறகு மீண்டும் உற்பத்தியாகும் வளம் புதுப்பிக்க கூடிய வளம்.<br>2. காற்று, சூரிய ஒளி, நீர் | 1. பயன்படுத்திய பிறகு மீண்டும் உற்பத்தி செய்ய இயலாத வளம், புதுப்பிக்க முடியாத வளம்.<br>2. நிலக்கரி, பெட்ரோலிய பொருட்கள் |

| | | |
|---|---|---|
| | 3. உற்பத்தி கால அளவு பொருளுக்கு பொருள் வேறுபடுகிறது. | 3. இது உற்பத்தி செய்ய நீண்ட காலம் தேவை. |
| 39 | <u>காற்று மின்சக்தி</u> | <u>அனல் மின்சக்தி</u> |
| | 1. காற்றின் வேகத்தில் இருந்து காற்றாலைகள் உதவியோடு உற்பத்தி செய்யப்படுகிறது.<br>2. தொடக்கத்தில் ஆகும் செலவு அதிகம்<br>3. தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கேரளா, குஜராத், கர்நாடகம் மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம் மற்றும் இலட்சத் தீவுகள். (ஏதேனும் நான்கு இடங்கள்)<br>4. மாசு ஏற்படுத்தாது. | 1. நிலக்கரி, பெட்ரோலியம் இயற்கை எரிவாயு போன்றவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது.<br>2. காற்று சக்தி ஆகும் செலவை விட அதிகம் செலவு ஆகும்.<br>3. அஸ்ஸாம், ஜார்கண்ட், உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு, பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான் கர்நாடகம், கேரளா ஒரிசா மற்றும் டில்லி (ஏதேனும் நான்கு இடங்கள்)<br>4. மாசு ஏற்படுத்தக் கூடியது. |
| 40 | வேளாண் சார்ந்த தொழிலகம் | கனிமம் சார்ந்த தொழிலகம் |
| | 1. விவசாயப் பொருட்களை மூலப் பொருட்களாக கொண்டு செயல்படும் தொழிற்சாலைகள் ஆகும்.<br>2. கரும்பு, பருத்தி, சணல்ஆலைகள் | 1. கனிமப் பொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்டு செயல்படும் தொழிற்சாலைகள் ஆகும்.<br>2. இரும்பு எஃகு, அலுமினிய ஆலைகள். |
| 41 | <u>தன்னிறைவு வேளாண்மை</u> | <u>வணிக வேளாண்மை</u> |
| | 1. குறைந்த அளவு நிலத்தில் குடும்பத் தேவைக்காக உணவுப் பயிர்கள் உற்பத்தி செய்வதாகும்.<br>2. இந்த வேளாண்மையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பயன்பாடு போக மீதமுள்ளதை உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்வர்.<br>3. நெல், கோதுமை போன்றவை.<br>4. இம்முறை வேளாண்மையை 'தீவிர வேளாண்மை' என்கிறோம்.<br>5. இவ்வேளாண்மை பயிர்கள் தொழிற்சாலைகளுக்கு<br>6. மூலப்பொருளாவதில்லை. | 1. வணிக தேவைக்காக அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் பயிர்களின் வேளாண்மையாகும்.<br>2. இந்த வேளாண்மையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை பெரும்பாலும் ஏற்றுமதி செய்யப் பயன்படுகிறது.<br>3. தானியங்கள் கரும்பு, தேயிலை, பருத்தி, சணல் போன்றவை.<br>4. இம்முறை வேளாண்மையை 'பரந்த வேளாண்மை' என்கிறோம்.<br>5. இவ்வேளாண்மை பயிர்கள் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருளாகிறது. |

| | | |
|---|---|---|
| | இவ்வேளாண்மையில் பெரும்பாலும் உணவுப் பயிர்களே பயிரிடப்படுகிறது. | 6. இவ்வேளாண்மையில் பெரும்பாலும் பணப்பயிர்களே பயிரிடப்படுகிறது. |
| 42 | ஏற்றுமதி | இறக்குமதி |
| | 1. ஏற்றுமதி என்பது நம் நாட்டின் உபரி பொருட்களையும் சேவைகளையும் அந்நிய செலாவணிக்காக வெளிநாட்டிற்கு விற்பதாகும்.<br>2. இந்தியா ஏறத்தாழ 7500 விதமான பொருட்களை உலகின் சுமார் 190 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.<br>3. விவசாயப் பொருட்கள், கனிமங்கள், தோல் பொருட்கள், இராசயன பொருட்கள், இயந்திர பொருட்கள், ஆடை ஆபரணங்கள். | 1. இறக்குமதி என்பது நமக்கு தேவையான பொருட்களையும் சேவைகளையும் வெளிநாட்டில் இருந்து வாங்குவதாகும்.<br>2. சுமார் 6000 விதமான பொருட்களை 140 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது.<br>3. போக்குவரத்து சாதனங்கள், இயந்திரக் கருவிகள், மின்னியல் இயந்திரங்கள், கோதுமை, மருந்துகள், பெட்ரோலியம், உரங்கள், செய்தித்தாள்கள். |
| | (ஏதேனும் 2 பொருட்கள் மட்டும் போதுமானது) | |
| 43 | <u>சாலைவழி</u> | <u>இரயில் வழி</u> |
| | 1. இந்தியாவின் சாலைவழி போக்குவரத்து செலவுமிக்க திறனுடைய மிகச் சிறந்த போக்குவரத்து வழியாகும்.<br>2. நாட்டின் பல்வேறு பகுதிகளை அதிக சாலைகளால் இணைக்கிறது.<br>3. இந்திய சாலைவழிப் போக்குவரத்து 3,314 மில்லியன் கி.மீ நீளம் கொண்டுள்ளது.<br>4. இந்திய சாலைப்போக்குவரத்து உலகின் இரண்டாவது பெரிய சாலைப் போக்குவரத்தாக அமைந்துள்ளது.<br>5. சமூகத்தில் அனைத்துத் தரப்பு | 1. இரயில் போக்குவரத்து பயணி மற்றும் சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லும் மிகச் சிறந்த போக்குவரத்து சாதனமாகும்.<br>2. நாட்டின் தொலைவில் உள்ள மக்களை இணைக்கிறது<br>3. இந்திய ரயில் போக்குவரத்து குறுக்கிலும் நெடுக்கிலுமாக 63,273 கி.மீ தூரம் 7025 இரயில் நிலையங்களை இணைக்கிறது.<br>4. இந்திய ரயில்போக்குவரத்து வலை ஆசியாவில் மிகப் பெரியது. உலகில் இரண்டாவது மிகப்பெரியது.<br>5. இது வணிகம், கல்வி சுற்றுலா |

| | | |
|---|---|---|
| | 6. மக்களும் சாலை வழியைப் பயன்படுத்துகின்றனர்<br>சாலைகள், கிராமச்சாலை, மாவட்டச் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், தேசிய நெடுஞ்காலைகள், தங்க நாற்கர உயர்தர நெடுஞ்சாலைகள், விரைவு நெடுஞ்சாலைகள் எல்லையோர சாலை மற்றும் பன்னாட்டு சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. | 6. மற்றும் தேசிய ஒற்றுமையை வளர்க்கிறது.<br>இருப்புப் பாதைகள், அகலப்பாதை, மீட்டர் பாதை, குறுகிய பாதை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. |

| <u>பிரிவு – IV</u> | மதிப்பெண் 8 (2 x 4 =8) |
|---|---|

| | | |
|---|---|---|
| 44 | <u>ஜெர்மனியின் பேராசை</u><br>(அ) கெய்சர் இரண்டாம் வில்லியம்.<br>(ஆ) உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் உரிமை மற்றும் திறமை ஜெர்மனிக்கு மட்டுமே உள்ளது என்று கருதினார்.<br>(இ) ஆங்கிலேயர்களின் பேரரசில் சூரியன் மறைவதேயில்லை என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை.<br>(ஈ) ஹெலிகோலாண்ட். | 1<br>1<br>1<br>1 |
| 45 | <u>ஃபிராங்க்ளின் டி.ரூஸ்வெல்ட்</u><br>(அ) 1932 ஆம் ஆண்டு.<br>(ஆ) எப். டி. ஆர் (FDR) என அழைக்கப்பட்டார்.<br>(இ) "நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். அமெரிக்க மக்களுக்கு புதிய பயனுரிமைக் கொள்கையை அர்ப்பணிக்க நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்."<br>(ஈ) புதிய பயனுரிமைக் கொள்கை. | 1<br>1<br>1<br>1 |
| 46 | <u>ஆரிய சமாஜம்</u><br>(அ) மூல் சங்கர்.<br>(ஆ) சுவாமி விராஜனந்தர்.<br>(இ) வேதங்களை நோக்கிச் செல்.<br>(ஈ) பெண்கல்வி, கலப்பு மணம், சமபந்தி உணவு முறை பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம். | 1<br>1<br>1<br>1 |
| 47 | <u>கே. காமராஜர்</u> | |

| | | |
|---|---|---|
| | (அ) 1924 –ம் ஆண்டு வைக்கம் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டதின் மூலம்.<br>(ஆ) அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார்.<br>(இ) தீரர் சத்தியமூர்த்தியின் வீட்டில் இந்திய தேசியக் கொடியை ஏற்றினார்.<br>(ஈ) அக்டோபர் 2, 1975 ஆம் ஆண்டு. | 1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| | **பிரிவு – V** | |
| | **பகுதி – I** | **4 x 5 = 20** |
| **48 m)** | **சர்வதேச சங்கத்தின் சாதனைகள் :**<br>1. பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு – சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி – பின்லாந்து – ஸ்விடன் இடையே பால்டிக் – ஆலந்து தீவு.<br>2. சைலீசியாவின் எல்லைப் பிரச்சனை.<br>3. கிரீஸ் – இத்தாலி – கார்ஃபூ தீவு.<br>4. கிரீஸ் – பல்கேரியா – எல்லைப் பிரச்சனை.<br>5. ஜெர்மனி இணைவு (1926) – சோவியத் ரஷ்யா இணைவு (1934) – – சர்வதேச சங்கத்தில் சேர நடவடிக்கை.<br>6. பெரு – கொலம்பியா – எல்லைப் பிரச்சனை.<br>7. பல்வேறு நோய்களுக்கு தீர்வு.<br>8. அகதிகள் – தொழுநோயாளிகள் மறு வாழ்வு – பண்பாடு கூட்டுறவு வளர்வு.<br>9. உலக நாடுகளின் கல்வி தரம்.<br>(ஏதேனும் 5 போதுமானது) | **5 Marks** |
| **48 (ஆ)** | **i) நிர்வாக காரணங்கள்:**<br>1. நம்பிக்கையின்மை – வெறுப்பு – பாரசீக மொழிக்கு பதிலாக ஆங்கில மொழியை புகுத்தியது.<br>2. நீதி வழங்கும் முறை – அதிக செலவு – இயந்திர தன்மை – கால விரயம் – மக்கள் உடைமை – உயிர் பாதுகாப்பு இல்லை.<br>4. நிலவரி முறை – பிரபுக்களும், குடியானவர்களும் பாதிக்கப்பட்டனர்.<br>4. இந்தியர்கள் – அரசியல் , இராணுவம் – உயர் பதவி – மறுப்பு . | |

| | | |
|---|---|---|
| | (ஏதேனும் 3)<br>ii) <u>இராணுவக் காரணங்கள்:</u><br>1. சிப்பாய்களின் அதிருப்தி<br>2. இந்திய ஆங்கில சிப்பாய்களுக்கிடையேயான ஊதிய வேறுபாடு.<br>3. இந்திய சிப்பாய்கள் – இழிவு – தாழ்வு<br>4. 1856 – கானிங் பிரபு – இராணுவப் பணியாளர் சட்டம்<br>5. போர் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் – டெல்லி, அலகாபாத் – இந்திய படைவீரர்களின் கட்டுப்பாடு.<br>(ஏதேனும் 3) | |
| 48 (இ) | <u>நீதிக்கட்சியின் தோற்றம்:</u><br>1. நீதிக்கட்சி – தென்னிந்திய நல உரிமைக்கழகம் – சென்னை.<br>2. டி. எம். நாயர், தியாகராயச் செட்டி – 1916 –தொடங்கப்பட்டது.<br><u>சாதனைகள்:</u><br>1. சாதி அடிப்படையில் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு.<br>2. சமூக சீர்திருத்தங்கள் – கிராம முன்னேற்றம்.<br>3. அனைத்து சமூகத்தினரும் சமமான பிரதிநிதித்துவம்.<br>4. சமூக அரசாணை 1921 மற்றும் 1922– பார்ப்பனர் அல்லாதவர் – கல்வி , உள்ளாட்சி – இடஒதுக்கீடு.<br>5. 1924–பணியாளர் தேர்வு வாரியம். 1929 –பொதுப்பணி தேர்வாணையம்.<br>6. அனைத்து சமூகத்தினரும், கல்லூரி கமிட்டிகள்.<br>7. 1925–ஆந்திரா பல்கலைக்கழகம், 1929–அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.<br>8. 1926–இந்து சமய அறநிலையச் சட்டம்.<br>9. 1921–பெண்களுக்கு வாக்குரிமை – தேவதாசி முறை ஒழிப்பு, வன்கொடுமை தடைச்சட்டம் – தொழிலாளர் நலச்சட்டம்.<br>10. ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைத் திட்டம்.<br>11. தியாகராயச் செட்டியார் – இலவச மதிய உணவுத் திட்டம்.<br>12. ஆயுர்வேதம், சித்த மருத்துவம், யுனானி – ஊக்கம்.<br>(ஏதேனும் 8) | 1 மதிப்பெண்<br><br>4 மதிப்பெண் |
| | <u>பகுதி – II</u> | |
| 49. (அ) | <u>பஞ்சசீலம் மற்றும் அணிசேராக் கொள்கை –பஞ்சசீலம்:-</u> | |

| | | |
|---|---|---|
| | <u>ஜவஹர்லால் நேருவின் 5 அம்ச பஞ்ச சீல கொள்கைகள்:</u><br>1. பிற நாட்டின் ஒற்றுமை, இறையாண்மை – மதிப்பு<br>2. பிற நாட்டை தாக்கக் கூடாது.<br>3. உள்நாட்டு விவகாரங்களில் – தலையிடாமை.<br>4. சமத்துவம் மற்றும் பரஸ்பர நல்லுறவு.<br>4. அமைதியான முறையில் இணங்கி இருத்தல்<br>(அனைத்தும்)<br><u>ஆ) அணி சேராக் கொள்கை:</u><br>1. இரண்டாம் உலகப்போர் – அமெரிக்கா, ரஷ்யா – பனிப்போர்.<br>2. இந்தியா நடுநிலைமை. | 3 மதிப்பெண்<br><br>2 மதிப்பெண் |
| 49 (ஆ) | <u>தேசிய ஒருமைப்பாடு:</u><br>மக்களின் வாழ்க்கை முறை – மொழி, உணவு, உடை, வேறுபாடு – பாரம்பரியத்தில் ஒற்றுமை – ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு – பாரதத் தாயின் பிள்ளைகள் சகோதர, சகோதரி என்ற எண்ணம் – தேசிய கொடி, தேசியசின்னம், தேசிய கீதம் – ஒருமைப்பாடு வளர்ப்பவை – ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. (ஏதேனும்5) | 5 மதிப்பெண் |
| (இ) | நுகர்வோரைப் பாதுகாக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள், கல்வி நிறுவனங்கள் – நுகர்வோர் கழகங்கள் – விழிப்புணர்வு – மகளிர் சுய உதவிக் குழுக்கள் – ஊராட்சி பிரதி நிதிகள் – கிராமங்கள் நகர்புறங்கள் – குடியிருப்பு நலச்சங்கங்கள் – கருத்தரங்கம், பொது பணிமனை – விழிப்புணர்வு – தமிழ்நாடு நுகர்வோர் கவசம் – மாத இதழ் – வானொலி, தொலைக்காட்சி – குறும்படங்கள். (ஏதேனும்5) | 5 மதிப்பெண் |
| <u>பகுதி III</u> | | |
| 50 (அ) | <u>இமய மலையின் முக்கியத்துவம்:</u><br>தெ‹மேற்கு பருவக்காற்று தடுத்து – நல்ல மழைபொழிவு – இயற்கை எல்லை – அந்நிய படைபெடுப்பை தடுத்தல் – வற்றாத நதிகள் உருவாகும் இடம் – உயரமான சிகரங்கள் – கோடை வாழிடங்கள் – புனித தலங்கள். (ஏதேனும்5) | 5 மதிப்பெண் |
| (M)) | <u>வாகன தொழிலகங்கள் அல்லது மென்பொருள் தொழிலகங்கள்:-</u><br>அ. <u>வாகன தொழிலகங்கள்:</u><br>முதல் வாகன தொழிலகம் – 1947– குர்லா – பிரிமியர் ஆட்டோ | 5 மதிப்பெண் |

| | | |
|---|---|---|
| | மொபைல் –1948–இந்துஸ்தான் மோட்டார் – உத்தரபாரா –30 ஆண்டு – அசுரவளர்ச்சி உற்பத்தி மையங்கள் – மும்பை, சென்னை, கொல்கொத்தா, டெல்லி, புனே, அகமதாபாத், லக்னோ, சதாரா, மைசூர் – பொருளாதார தாராள மயக் கொள்கை – வெளிநாட்டு முதலீடு – வாகன தயாரிப்புத் துறை – சுசுகி – ஹோண்டா.... (ஏதேனும் 5)<br>(அல்லது)<br>ஆ. மென்பொருள் தொழிலகம்:<br>இந்தியப் பொருளாதாரம் – முக்கியத் தொழிலகம் – குறைந்த ஊதியம் – திறன்மிகு வல்லுநர்கள் – வேகமான வளர்ச்சி – மின்னியல் பூங்காக்கள் – சென்னை, கோயம்புத்தூர், பெங்களூர், மும்பை.... 500 நிறுவனங்கள் – அதிக வேலைவாய்ப்பு – இந்திய தேசிய வருமானம் – 9% உற்பத்தி – மென்பொருள் சேவை – 95 நாடுகளுக்கு ஏற்றுமதி. (ஏதேனும் 5) | 5 மதிப்பெண் |
| (ï) | தொலை நுண்ணுணர்வு நுட்பத்தினை விவரிக்க:<br>1. புவியின் விவரங்களை தொலைவில் இருந்து சேகரிப்பது ஆகும். (நேரடியாக தொடர்பு கொள்ளாமல்)<br>2. இவற்றின் மூலம் பாறைக்கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம் போன்றவை அளவிடப்படகிறது.<br>3. இதில் உணர்விகள் என்ற கருவி பயன்படுகிறது.<br>4. இக்கருவிகள் ஹெலிகாப்டர், விமானங்கள் செயற்கைக் கோளில் பொருத்தப்பட்டு தகவல் சேகரிக்கப்படுகிறது.<br>5. சூரிய ஒளியின் மின்காந்த அலைகளை பதிவு செய்வதன்மூலம் பெறப்படுகிறது. (ஏதேனும் 5) | 5 மதிப்பெண் |
| | பகுதி IV | |
| 51 (m) | நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் வழிமுறைகள் :<br>1. c‰g¤Â Kiw<br>2. tUkhd Kiw<br>3. bryéd Kiw<br>1. உற்பத்தி முறை:<br>நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மற்றும் பணிகளின் ஒட்டு மொத்த மதிப்பை கணக்கில் எடுத்துக் கொண்டு இம்முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.<br>2. வருமான முறை:<br>இம்முறையில் நாட்டில் உள்ள அனைத்து மக்களின் வருமானத்தை அடிப்படையாக கொாண்டு கணக்கிடப்படுகிறது.<br>3. செலவின முறை:<br>இம்முறையில் மக்களின் நுகரும் பொருட்களுக்கான செலவு. முதலீடு, சேமிப்பு ஆகிய ஒன்றின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. | 1 மதிப்பெண்<br>2 மதிப்பெண்<br>1 மதிப்பெண்<br>1 மதிப்பெண் |

| | | |
|---|---|---|
| (M) | **பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தின் (2007–2012) நோக்கம்:**<br>1. நீர்ப்பாசனம்,கிராமமின்மயமாதல், கிராமசாலைகள் மேம்படுத்த அரசு முதலீட்டை அதிகரித்தல்.<br>2. மின்சாரம் மற்றும் உரங்களுக்கு மானியம் குறைத்தல்<br>3. வேளாண் ஆராய்ச்சி<br>4. சுற்றுச்சூழல்<br>5. வேலைவாய்ப்பு<br>6. கிராமப்புற கட்டமைப்பு<br>7. வறுமை ஒழித்தல்<br>8. தொடக்கக்கல்வி இடைநிற்றலை குறைத்தல் (ஏதேனும் 5) | 5 மதிப்பெண் |
| (இ) | 1. பசுமைப் புரட்சி 1967 ஆம் ஆண்டு இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. (எழுதப்பட்டிருக்க வேண்டும்)<br>2. இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் பசுமைப் புரட்சி என்ற செயல்முறையை நிலச்சீர்த்திருத்தம் அதிக விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகள் பயன்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட பாசனவசதிகள் மூலமாக அறிமுகப்படுத்தியது.<br>3. பசுமைப் புரட்சி என்பதே கோதுமை மற்றும் அரிசி போன்ற உணவுப் பயிர் உற்பத்தியை அதிகரித்தது. அதற்காக வீரியமுள்ள விதை, நீர்ப்பாசன வசதிகள், இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகளும் தேவைப்படுகின்றன.<br>4. பசுமை புரட்சியின் விளைவாக இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தது.<br>5. அதிக விளைச்சல் தரும் விதைகளை பயன்படுத்துவதற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனமும் இந்திய வேளாண் பல்கலைக்கழகங்களான லூதியானா, பந்த் நகர், கோயம்புத்தூர் முக்கிய காரணம் ஆகும். (ஏதேனும் 3) | 1 மதிப்பெண்<br><br>4 மதிப்பெண் |
| | **பிரிவு – VI** | **5 x 1 = 5** |
| 52 | **காலக்கோடு** | |

| | | |
|---|---|---|
| | 1920 | சர்வதேச சங்கம் தோற்றம் / ஒத்துழையாமை இயக்கம் / கிலாபத் இயக்கம் |
| | 1922 | சௌரி சௌரா சம்பவம் / ஒத்துழையாமை இயக்கம் கைவிடல் |
| | 1923 | சுயராஜ்ஜியக்கட்சி |
| | 1927 | சைமன் குழு அமைத்தல் |
| | 1928 | சைமன்குழு இந்தியா வருகை |

| | | | |
|---|---|---|---|
| | 1929 | லாகூர் காங்கிரஸ் மாநாடு | |
| | 1930 | சட்ட மறுப்பு இயக்கம் / முதல் வட்டமேஜை மாநாடு – உப்பு சத்யாகிரகம் | |
| | 1931 | இரண்டாவது வட்ட மேஜை மாநாடு – காந்தி இர்வின் ஒப்பந்தம் | |
| | 1932 | மூன்றாவது வட்ட மேஜை மாநாடு<br>பூனா ஒப்பந்தம் / வகுப்புவாத அறிக்கை | |
| | 1935 | இந்திய அரசு சட்டம் | |
| | 1937 | ரோம் – பெர்லின் – டோக்கியோ அச்சு | |
| | 1939 | இரண்டாம் உலக போர் தொடக்கம் | |
| | 1940 | பாகிஸ்தான் தனிநாடு கோரிக்கை / ஆகஸ்ட் நன்கொடை | |
| | | | (ஏதேனும் 5) |
| | **பிரிவு – VII** | | **1 x 5 = 5** |
| 53 | **பார்வையற்ற மாணவர்களுக்கான வரைபடக் குறிப்புகள்**<br>**ஏதேனும் ஒரு குறிப்பு மட்டும் அளித்தால் போதுமானது.** | | |
| அ) | **ஆசிய வரைபடம்** | | |

| | | |
|---|---|---|
| (i) | பெய்ஜிங் | (i) சீனாவின் தலைநகர்.<br>(ii) இரண்டாம் அபினிப் போரின் தோல்வி பீகிங் உடன்படிக்கை மூலம் முடிவிற்கு வந்தது. |
| (ii) | ஹாங்காங் | (i) முதல் அபினிப் போரின் முடிவில் ஹாங்காங் தீவை இங்கிலாந்திற்கு தாரை வார்த்தது.<br>(ii) சீனாவின் முக்கிய துறைமுகம். |
| (iii) | கொரியா | (i) சீனாவின் அண்டை நாடு. |
| (iv) | ஜப்பான் | (i) முதல் உலகப் போருக்குப் பின் வலிமை மிக்க நாடாக உருவாகியது.<br>(ii) 1931 ஆம் ஆண்டு மஞ்சூரியாவைக் கைப்பற்றியது. |
| (v) | பசிஃபிக் பெருங்கடல் | (i) உலகிலேயே பெரிய பெருங்கடல். |

ஆ) (அல்லது) **1 x 5 = 5**

| | | |
|---|---|---|
| (i) | டெல்லி | இரண்டாம் பகதூர் ஷா டெல்லியை ஆட்சி செய்தார். |

| | | | |
|---|---|---|---|
| | (ii) | மீரட் | மீரட்டில் படைவீரர்கள் வெளிப்படையாக புரட்சியில் ஈடுபட்டனர். |
| | (iii) | ஜான்சி | இராணி இலட்சுமிபாய் ஜான்சியை ஆட்சி செய்தார். |
| | (iv) | லக்னோ | 1857 ஆம் ஆண்டு புரட்சியின் மையமாக விளங்கியது. |
| | (v) | பாரக்பூர் | பாரக்பூரில் முதன் முதலில் புரட்சி வெடித்தது. |

| | | | |
|---|---|---|---|
| 54 | | | 1 x 10 = 10 |
| | (i) | இமயமலை | I. உலகிலேயே மிக உயர்ந்த மலை.<br>II. இமயமலைகளை பனி உறைவிடம் என்றும் அழைப்பர். |
| | (ii) | தேயிலை விளையும் பகுதி | அஸ்ஸாம், மேற்குவங்காளம், கேரளா மற்றும் தமிழ்நாடு |
| | (iii) | வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை | I. அக்டோபர் முதல் நவம்பர் வடகிழக்கு பருவக்காற்று வீசும் காலம்<br>II. நிலத்திலிருந்து கடலை நோக்கி வீசும். |
| | (iv) | மேற்கு கடற்கரைச் சமவெளி | மேற்குக் கடற்கரைச் சமவெளி வடக்கே கட்ச் பகுதியில் உள்ள ரான் முதல் தெற்கே கன்னியாகுமரி வரை பரவியுள்ளது. |
| | (v) | நர்மதை ஆறு | I. நர்மதை ஆறு அரபிக்கடலில் கலக்கிறது.<br>II. நர்மதை ஆறு அமர்கண்டக் மலையில் உற்பத்தியாகிறது. |
| | (vi) | நெல் விளையும் ஒரு பகுதி: | I. மேற்குவங்கம், பஞ்சாப், உத்திரப்பிரதேசம், பீகார் ஒரிசா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் |
| | (vii) | பெங்களூரு | I. கர்நாடகாவின் தலைநகர்<br>II. மின்னியல் தலைநகர் |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | (viii) | ரான் ஆஃப் கட்ச் | மேற்கு கடற்கரைச் சமவெளியில் அமைந்துள்ளது. |
| | (ix) | வண்டல் மண் | நெல் அதிகமாக விளையும் மண் |
| | (x) | சென்னை | தமிழ்நாட்டின் தலைநகர் |
| | (xi) | மன்னார் வளைகுடா | இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் உள்ளது. |
| | (xii) | எவரெஸ்ட் | உலகிலேயே மிக உயரமான சிகரம். |
| | (xiii) | தக்காண பீடபூமி | இது ஒரு லாவா பீடபூமி |
| | (xiv) | பருத்தி விளையும்மிடம் | குஜராத், மகாராஷ்டிரம், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு, மத்தியபிரதேசம், பஞ்சாப் மற்றும் ஹரியானா . |
| | (xv) | அந்தமான் நிக்கோபார் தீவுகள் | வங்காள விரிகுடாவில் அமைந்துள்ளது. |

*****